மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, ஒரு சிலயிடங்களில் அப்படிப்பட்ட நிலைமைகள் கூட ஏற்படுகின்றன. இல்லை என்று நான் சொல்லவில்லை. வியாபாரிகள் ஒன்றாகச் சேர்ந்துகொண்டு அங்கே கேள்வி கேட்பவர்களை எப்படியாவது தடுத்துவிடவேண்டும் என்ற முறையில் அவர்களைக்கூட விலைக்கு வாங்குகிற நிலை ஒரு சிலயிடங்களில் இருக்கிறது. அப்படிப்பட்ட நிலைகள் தவிர்க்கப்படவேண்டும் என்ற முறையில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு நமக்கு வரக்கூடிய வருமானம் குறைவு என்றால் அப்போது ஏலத்தில் விடுவதில்லை. மீண்டும் பொது ஏலத்தில் கூப்பிடுகிற ஒரு நிலையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறோம். எனவே அப்படிப்பட்ட நிலைகளையெல்லாம் தவிர்க்கிற முறையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது.

அரசின் அனுமதி பெறாமல் உருவாகும் புதிய குடியிருப்புகளைத் தடுக்கும் திட்டம்.

525—(* வினா எண். 21786) திரு. எம். சின்னசாமி; மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல இடங்களில் அரசின் நகரமைப்புத் திட்ட விதிகளைப் பின்பற்றாமல், அரசின் அனுமதி பெறாமல், புதிய குடியிருப்புகள் உருவாவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) : நகரமைப்புத் திட்ட மற்றும் கட்டிட விதிகளைப் பின்பற்றாமலும், முன் அனுமதி பெறப்படாமலும், நகராட்சிகளில் உருவாகும் புதிய குடியிருப்புகள் பற்றி உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற விதிமுறைகள் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கெல்லாம் அனுப்பப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இப்போதிருக்கிற விதிமுறைகள்படி நகரமைப்பு விதிகளை மீறினால் சாதாரண தண்டனைதான் வழங்கப்படுகிறது. ஆகவே அப்படி விதிமுறைகளை மீறுகிறவர்கள் மீது கிரிமினல் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து தண்டனை கொடுக்கக்கூடிய அளவிற்கு செய்யவில்லையென்றால் சட்டத்தைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். ஆகவே அப்படிப்பட்ட முயற்சியை அரசாங்கம் எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 31]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, இப்போதும் கூட கிரிமினல் வழக்குதான் போடப்படுகிறது. கிரிமினல் கோர்ட்ஸ்-ல் தான் இவைகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. செகன்ட் க்ளாஸ் மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில், யார் யார் இப்படி அனுமதி பெறாமல் இது போன்று கட்டடங்களைக் கட்டுகிறார்களோ அவர்களுக்கு அபராதத் தொகை அந்த வழக்கு மன்றத்தில் போடப்படுகிறது. அந்த நிலைதான் இருந்து வருகிறது. இருக்கிற தண்டனையை அதிகமாக்கவேண்டும் என்பதைவிட யார் யார் எந்த எந்தப் பகுதியில் அலுவலர்களாக இருக்கிறார்களோ அவர்கள் அதற்குரிய நடவடிக்கைகளை ஒரு மாதத்தில் எடுக்காவிட்டால் அவர்கள்மீது நடவடிக்கை எடுத்து அவர்களை தற்காலிக பணி நீக்கம் செய்கிற அந்தத் திட்டத்தைத்தான் இப்போது அரசாங்கம் மூலம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எம். சின்னசாமி : தலைவர் அவர்களே, இப்படி அனுமதி பெறாமல் வீடு கட்டுபவர்களுக்கு மின்சாரம் கொடுக்கக் கூடாது. பேரூராட்சி அல்லது நகராட்சி அப்படிப்பட்டவர்களுக்கு குடிநீர் வழங்கக்கூடாது என்ற முறையில் விதியைத் திருத்தினால் நிச்சயமாக அனுமதி பெற்றுச் செய்கிற நல்லதொரு வாய்ப்பு ஏற்படும். ஆகவே அமைச்சர் அவர்கள் அந்த வகையில் இதற்கு ஒரு பரிகாரம் காண்பதற்கு முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவர் அவர்களே, அனுமதி இல்லாமல் கட்டக்கூடிய கட்டடங்களுக்கு மின்சாரத் துறை நம்மைக் கேட்காமலேயே அல்லது நகராட்சிகளைக் கேட்காமலேயே மின் இணைப்பை கொடுத்துவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலை போக்கப்பட வேண்டும் என்று மின்சார வாரியத்திற்கு பல்வேறு நேரங்களில் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஆகவே இதைத் தவிர்க்கிற முறையில் கண்டிப்பாக நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதே நேரத்தில், அனுமதி பெறாமலேயே பல்வேறு கட்டிடங்கள் பல பகுதிகளில் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். உடனடியாக நடவடிக்கை எடுத்து நாம் 'டெமாலிஷன் நோட்டீஸ்' என்று சொல்லக்கூடிய அளவிற்கு கட்டிய கட்டடங்களை எல்லாம் உடனடியாக இடித்துத் தீர வேண்டும் என்ற அந்த அறிக்கையையும் கூட கொடுக்கிறோம். ஆனால் கோர்ட்டுக்குச் சென்று அவர்கள் தடை பெற்று வந்து விடுகிறார்கள். ஆகவே இடிக்கவும் முடியவில்லை, கட்டுவதைத் தடுக்கவும் முடியவில்லை. அப்படிப்பட்ட நிலைதான் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தப் பகுதியில் இருக்கிற அதிகாரிகள் இதற்கு முக்கிய காரணமாக இருக்க முடியும்.

எனவே அந்தந்தப் பகுதிகளில் இருக்கின்ற ஒவ்வொரு அதிகாரிக்கும் இந்த இந்த அதிகாரங்களைக் கொடுத்து, இன்னென்னப் பணிகளைப் பார்க்கவேண்டுமென்ற விதியின் அடிப்படையில் நாம் செய்துகொண்டிருக்கிறோம். ஆகவே, அந்த அதிகாரிகள் 'ஹாண்ட் இன்கிளவ்' என்பது போல்,

அவர்களே இதற்கு உடந்தையாக இருக்கிறார்களோ என்ற ஐயப்பாடு நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவேதான், அவர்கள் மீது நடவடிக்கை எடுத்தால், கட்டிடங்களை அனுமதி பெறாமலே கட்டப்படும் சூழ்நிலை கண்டிப்பாக தவிர்க்கப்படும் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

(முற்பகல் 9-30)

இரவு நேரத்தில் ஓட்டப்படும் ஆம்னி பஸ்கள்.

526—(*வினா எண். 17186)—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இரவு நேரத்தில் 'ஆம்னி' பஸ்கள் ரெகுலர் சர்வீசாக நடைபெற்று வருவதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்துக்கு வருவாய்க் குறைவு ஏற்பட்டுள்ளது அரசின் கவனத்துக்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இரவு நேரத்தில் ஆம்னி பஸ்கள் ஓட்டப்படுவதால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் வருவாய் எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதைப் பற்றி ஆய்வு நடந்துகொண்டிருக்கிறது. முழு விபரங்கள் கிடைக்கப்பெற்ற பிறகு அரசு ஒரு கொள்கை முடிவெடுக்க உத்தேசித்துள்ளது.

திரு. து. புருஷோத்தமன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்னி பஸ்கள் ரெகுலர் சர்வீசாக ஓடுவதால் நம்முடைய பேருந்துகள் பாதிக்கப்படுவது நாம் அறிந்தது தான். நம்முடைய அரசே இப்படிப்பட்ட பஸ்கள் ஓட்டுகிறவர்கள் மீது வழக்கு தொடர்ந்து, தற்காலிகமாக அந்த பஸ்கள் ஓட்டுவதை நிறுத்தியாகிவிட்டது. அதனால் திருவள்ளுவர் போக்குவரத்திற்கு நஷ்டம் ஏற்படுகிறது என்று தெரிந்துதான், இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் இந்த ஆய்வு தேவையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: தலைவர் அவர்களே, ஆய்வு என்பது எந்த வகையில் நம்முடைய பேருந்துகள் சிறப்பாக இருந்தால், அந்தப் பேருந்துகளுக்கு ஈடு செய்ய முடியும் என்ற வகையில் இப்போது செய்து கொண்டிருக்கிறோம். நாம் முழுமையாக செய்கிற போது, பாதிப்பு இருக்குமா என்பதை ஆய்வு செய்து, அதற்கான ஏற்பாட்டை ஒவ்வொரு இடத்திலும் செய்து கொண்டிருக்கிறோம். ஆய்வு என்பது இரண்டு ஆண்டுகளுக்கு பிறகு செய்து முடிப்பதல்ல. ஒவ்வொரு வழித் தடத்திற்கும் அந்த ஆய்வு செய்து, அதற்கான நடவடிக்கைகளை ஆங்காங்கே எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.